# THE RIGHT TO INFORMATION ACT AND STUDENTS OF ISLAMIC STUDIES AND ARABIC LANGUAGE, SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA: A EVALUATIVE STUDY

[(1)]I.Saujan, [(2)]AMM.Hijas, [(3)]ARM.Mahsoom

[(1)]Department of Islamic Studies, Faculty of Islamic Studies and Arabic Language

[(2), (3)]Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language

[(1)](saujaniqbal95@gmail.com)

**Abstract**

The Right to Information Act No. 12 of 2016 (RTI Act) certified by Parliament on August 4, 2016, and published as a Supplement to Part II of the Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka of August 5. 2016, can be considered one of the more meaningful and positive democratic measures passed during the time. The major concern of the RTI is to allow for greater probity in the functioning of the government departments to promote transparency and accountability in the working of the public bodies and contain the scourge of corruption, which are critical for ensuring good governance and development in the country. Social scientist believes that public participation is a must for a participatory development in a democratic country. In spite of this, Sri Lankan People Participation is not enough to the Act because of a lack of knowledge about the Act. Thus, the objectives of the study is to evaluate the knowledge level of the students about the RTI Act. Besides, explore the factors of contributing knowledge. This a quantitative and qualitative study consisting of questionnaire, interview and group discussion mainly. Therewith, research articles, book, magazines, newspaper and website of the right to information commission as techniques of data collection. By this study, most of the students have introductory knowledge only (73.95 percentage), 26.05 percentage of their any knowledge at all the Act and lack of application. Furthermore, usage of Medias, self-enthusiastic and motivation, selected subjects and family background are the key factors responsible for their poor level of knowledge. Therefore, this study suggests that in terms of giving knowledge of the Act, to enthusiasm knowledge sharing among their efficiently and systematically, including the Act into the syllabus, use the social media inefficiently way and conducting awareness programs, seminars and debates.

**Key Words:** The Right to Information Act, University Students

## அறிமுகம் (Inroduction)

ஒரு நாட்டின் முன்னோக்கிய பயணம் மற்றும் மக்களின் நலன் தொடர்பாக நோக்கும் போது தகவலறியும் உரிமை என்பது நாட்டின் பிரஜைகளுக்கு இருக்க வேண்டிய மிகவும் பெறுமதியான உரிமையாகும். குறித்த சட்டம் அரச அதிகாரிகளின் கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக கேள்விகேட்கவும் ஊழல்களை ஒழிப்பதற்கும் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட கருவியாகும். இதனை பொது மக்கள் முறையாகப் பயன்படுத்தும் போது நாட்டினை வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்ல முடியும். தகவல் அறியும் உரிமைச் சட்டமானது இலங்கை மக்கள் தகவலை அணுகிக் கொள்வதனை ஒழுங்கு படுத்தும் முகமாக 2016 ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் சட்டம் இயற்றப்பட்டது. இச் சட்டம் 2016 ஜுன் 24ஆம் திகதி பாராளுமன்றத்தினால் கொண்டுவரப்பட்டு 2017 பெப்ரவரி 3ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. ஒரு நாட்டு பிரஜையின் மீது தனிப்பட்ட ரீதியில் செல்வாக்குச் செலுத்தும் அல்லது பொதுச் சமூகத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் அரச கடமைப் பொறுப்புகள் தொடர்பாக பொதுப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் விடயங்கள் தொடர்பாக விசாரிப்பது அடிப்படை உரிமையாகும் என்பதை இச்சட்டம் ஏற்றுக்கொள்கிறது. இச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு சிவில் அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற பல்துறை சார்ந்தோர் தொடராகக் கோரிக்கை முன்வைத்து வந்தனர். இதன் விளைவாகத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தற்கு சமூகத்தில் உயர் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருப்பது இச்சட்டத்தைச் செயற்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாகும்.

எனினும் இச்சட்டத்தின் முழுமையான பிரதிபலன் பிரஜைகளுக்குரியதாகும். அதனால் ஏனைய சட்ட திட்டங்களைப் போன்றல்லாமல் இச்சட்டம் மக்களால் செயற்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும் இச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட இரண்டு வருடங்களில் சட்டத்தில் மக்கள் பங்கு பற்றுதல் தாக்கமானதாக இல்லை என்பது இச்சட்டத்தின் நடைமுறைசார் சவாலாக நோக்கப்படுகின்றது. பிராந்தியத்தில் ஏனைய நாடுகளை விடவும் இந்நாட்டு 95% எழுத்தறிவுடைய மக்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. எனவே குறித்த சட்டத்தை மக்கள் முழுமையாக பயன்படுத்துவர் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இச்சட்டம் தொடர்பாகப் படித்த சமூகத்திடமே முழுமையான அறிவின்மையானது ஒரு கணம் சிந்திக்கத் தூண்டுகின்றது. எனவே ஆய்வுப் பிரதேசமான இலங்கை தென்கிழக்கு பல்கழைக்கலகத்தின் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப் பீட மாணவர்களிடம் குறித்த சட்டம் தொடர்பான அறிவு நிலை எந்த மட்டத்தில் உள்ளது என மதிப்பீடு செய்வது காலத்தின் தேவையாக உணரப்பட்டதுடன் இதன் மூலம் உயர்கல்வியைத் தொடர்கின்ற மாணவர்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுவதற்கும் இவ்வாய்வு தூண்டுதலாக அமையும் என்ற எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனைச் சரியாக புரிந்து குறித்த உரிமையை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் நிர்வாகத்தைச் சரியாகவும் வெளிப்படையாகவும் நடாத்தவும், ஊழல் மற்றும் மோசடிகள் இன்றி மக்களுக்குச் சேவையாற்றவும், பொதுமக்களின் பங்கேற்புடன் கொள்கைகளை வகுக்கவும் வாய்ப்பாக அமையும்.

### ஆய்வின் நோக்கங்கள் (Objectives of Study)

1.தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பாக இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீட மாணவர்களின் அறிவுநிலையை மதிப்பீடு செய்தல்.

2.குறித்த சட்டம் பற்றிய அறிவு நிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடையாளம் காணல்.

### ஆய்வுப்பிரச்சினை (Research Problem)

21ம் நூற்றாண்டில் அரசதிணைக்களங்களிடமிருந்து தகவல்களைப் பெற்று மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் அங்கீகரித்தல் என்பன மறுக்க முடியாத அம்சங்களாகும். இலங்கை அரசு குறித்த சட்டத்தை மக்கள்மயப்படுத்துவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றது. ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது விழிப்புணர்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அமைச்சு சார்ந்த நிறுவனங்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் மாநாடுகள் மற்றும் கூட்டங்களும் இடம்பெற்றுள்ளன. இம்மக்கள்மயப்படுத்தும் செயற்பாடுகளுக்காக அரசு வருடாவருடம் 76 மில்லியன் ரூபாய்களைத் தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கி வருகின்றது. குறித்த சட்டம் தொடர்பாக விழிப்பூட்டுவதற்காக ஒதுக்கப்படும் நிதி மற்றும் முயற்சிகள் பாரியதாக இருக்கின்ற போதிலும் குறித்த சட்டம் தொடர்பாகப் படித்த மட்டங்களில் உள்ளவர்களிடையே போதிய அறிவற்ற நிலையினை அவதானிக்க முடிகின்றது. இந்நிலைக்குக் குறித்த பீடத்தின் மாணவர்களும் விதிவிலக்கானவர்கள் அல்லர். எனவே குறித்த பீடத்தின் மாணவர்களிடம் இலங்கையில் நடைமுறையில் உள்ள தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான அறிவு நிலை குறித்த தேடலே ஆய்வுப்பிரச்சினையாக ஆய்வாளர்களினால் அவதானிக்கப்பட்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

### ஆய்வின் முக்கியத்துவம் (Importance of Study)

அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற ரீதியில் நாட்டில் உள்ள குடிமக்களுக்கு நாட்டின் பிரதானிகளின் செயற்பாடுகள் குறித்து அறிவதற்கு உரிமை உண்டு. ஆனாலும் மக்களுக்கு இது குறித்துத் தெளிவு இருக்கின்றதா என்றால் அது தொடர்பான போதிய அறிவற்ற நிலையிலே மக்கள் உள்ளனர். அதிலும் குறிப்பாக கல்விகற்ற சமூகத்திற்கு மத்தியிலேயே இச்சட்டம் பற்றிய அறிவின்மையானது சட்டத்தை பின்னோக்கி நகர்த்துகின்ற சமூகக் காரணியாகக் கொள்கை வகுப்பாளர்களால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது பல்கலைக்கழக மாணவர்களைக் குறித்த சட்டத்தின் பால் அறிவினைப் பெற்றுக் கொள்ளத் தூண்டும் என்ற வகையிலும் இதற்கு முன்னர் இலங்கையில் இவ்வாறான ஆய்வு இடம்பெறவில்லை என்ற வகையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

## இலக்கிய மீளய்வு (Literature Review)

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தகவலறியும் உரிமைச் சட்டம் தொடர்பான ஆய்வுகளை தேடலுக்குட்படுத்திய போது அதிகமான ஆய்வுகள் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை அவதானிக்கமுடிந்தது. இருப்பினும் இலங்கைச் சூழலை மையப்படுத்திய, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மக்களினதோ மாணவர்களின்தோ அறிவு நிலையினை மதிப்பிடும் வகையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாய்வுகள் எதனையும் அவதானிக்க முடியவில்லை. குறித்த சட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொதுவான சில ஆய்வுகள் வாசிப்புக்குட்படுத்தப்பட்டது.

1. Centre for policy Alternatives இனால் "Study on information requests submitted to public authorities and responses received under the right to information Act, No.12 of 2016" என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தகவல் அறியும் உரிமைச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது தோன்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் நடைமுறைசார்ந்த பலவீனங்களை அடையாளப் படுத்துவதையும் இப்பலவீனங்களை இல்லாதொழிப்பதற்குத் தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதனையும் ஆய்வின் நோக்கங்களாகக் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அதிகாரிகளிடமுள்ள காலதாமதமாகக் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல், காரணமின்றி கோரிக்கைகளைப் புறக்கணித்தல், முழுமையான தகவல்கள் நிறுவனங்களிடம் காணப்படாமை மற்றும் தவறானத் தகவல்களை வழங்கல் போன்ற செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டது. இப்பலவீனங்களை நீக்குவதற்கு பயிற்றுவிக்கப்பட்ட அறிவும் ஆற்றலும் உடைய நேர்மையான அதிகாரிகள் நியமிக்கப்படல் வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் தலைப்பு, ஆட்பரப்பு, நோக்கம் மற்றும் முடிவு உட்பட அனைத்தும் இவ்வாய்விலிருந்து வேறுபட்டாலும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் என்றவகையில் இவ்வாய்வை வினைத்திறன்மிக்கதாக அமைத்துக் கொள்ள உதவியது.

2. Dinusha Jayasingha (LL.B) என்பவரால் மேற்கொள்ளப்பட்ட "Right to Information Act, no.12 of 2016: A Overview" என்ற ஆய்வின் ஆய்வுப்பிரச்சினை "இலங்கையில் நடைமுறையிலுள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான போதிய அறிவு பொதுமக்களிடம் இன்மையால் குறித்த சட்டத்தின் உச்ச பயனை அடைந்து கொள்வதற்கு தடையாகவுள்ளது." என்ற எடுகோளினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்காக தரவுகள் web survey of Sri Lanka press institution இருந்து பெறப்பட்டது. இவ்வாய்வின் பிரகாரம் 30.7% வீதமான மக்களிடம் எந்த அறிவும் அற்ற நிலையிலும் (No Knowledge at all) 27% வீதமானவர்களிடம் அடிப்படை அறிவு மாத்திரமும் (Basic Knowledge) 19.5% வீதமானவர்களிடம் முழுமையான அறிவு (Good Knowledge) காணப்படுகின்றமை கண்டறியப்பட்டது. ஆய்வின் முடிவாக அதிகமான மக்களிடம் குறித்த தகவல் தொடர்பாக எந்த விதமான அறிவும் அற்ற நிலையில் உள்ளனர் எனக் கொள்ளப்பட்டு அதனை நிவர்த்தி செய்வதற்கு பொறுத்தமான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வானது ஆய்வுப்பிரதேச அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் குறித்த சட்டம் தொடர்பான அறிவு நிலையை மதிப்பீடு செய்வதில் ஒன்றித்துள்ளது.

## ஆய்வு முறையியலும் தகவல் சேகரிப்பும் (Research Methodology & Data Collection)

இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீட மாணவர்களை மையப்படுத்திய இவ்வாய்வானது அளவுசார் (Quantitative) மற்றும் பன்புசார் (Qualitative) முறையிலமைந்த ஓர் விவரிப்பு ஆய்வாகும் (Descriptive Study).

இவ்வாய்வு ஒர் கள ஆய்வாக இருப்பதனால் ஆய்வினை நேர்த்தியாக பூரணப்படுத்தும் வகையில் முதலாம் நிலைத் தரவு மூலங்களான வினாக்கொத்து மூலம் 100 மாதரிகளும், குழுக்கலந்துரையாடல் மூலம் 39 மாதரிகளும் நேர்காணல் மூலம் 22 மாதரிகளும் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 161 ஆய்வுமாதரிகளிடமிருந்து தகவல்கள் திரட்டப்பட்டன. ஆய்வுமாதரிகளாகத் தொரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் நடப்பு ஆண்டில் குறித்த பீடத்தில் மூன்றாம் வருடத்தில் கல்வியைத் தொடர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறித்த சட்டம் தொடர்பான அறிவினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இரண்டாம் நிலைத் தரவுகள் மூலங்களான ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையதளங்கள் போன்றவற்றின் தகவல்கள் வாசிப்புக்குப்படுத்தப்பட்டது. திரட்டப்பட்டு தகவல்கள் அணைத்தும் கணணி மென்பொருளான SPSS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு வரைபுகள் காட்டப்பட்டுள்ளன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும் (Result and Discussion)**

1. **நோக்கம்-1**
   தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பாக இஸ்லாமிய கற்கைகள் அரபு மொழிப்பீட மாணவர்களின் அறிவுநிலையை மதிப்பீடு செய்தல்.

### I. தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான அறிமுக அறிவு.





Chart-1 (DO YOU KNOW RIGHT TO INFORMATION)

தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து வழங்கப்பட்ட வினாக்கொத்தில் "தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பாக நீங்கள் அறிந்துள்ளீர்களா?" என்றவினாவிற்கு 73.95% மாணவர்கள் குறித்த சட்டம் தொடர்பாக அறிந்திருப்பதுடன் 26.05% மாணவர்கள் குறித்த சட்டம் தொடர்பான அறியாதவர்களாக உள்ளனர்.

மக்களுக்கான உருவாக்கப்பட்ட உரிமையின் வெற்றியானது அவ்வுரிமையில் மக்கள் காட்டும் ஆர்வம் மற்றும் பங்குபற்றுதலிலேயே தங்கியுள்ளது. மேற்கத்திய நாடுகளில் உள்ள மக்களிடம் இது தொடர்பான பூரண அறிவு காணப்படுகின்றமையினால் அச்சட்டத்துடனான மக்களின் பங்குபற்றுதலும் உயர்வாகவே உள்ளது. இதற்கு மாற்றமாக இலங்கை மக்களுக்கு இது தொடர்பான குறைந்த அறிவுடையவர்களாக இருப்பதுடன் இக்குறைபாடு படித்த சமூகத்திடமும் காணப்படுவது இச்சட்டத்தினை பலவீனப்படுத்தும் மிகப்பிரதான காரணியாகக் காணப்படுகின்றது.

### II. சட்டம் பற்றிய அறிவுடையவர்களின் படி நிலை

| | N | Good Knowledge | Basic Knowledge | Poor Knowledge | Sum | Std. Deviation |
|---|---|---|---|---|---|---|
| Frequance | 3 | 15 | 38 | 21 | 74 | 11.930 |
| Valid N (listwise) | 3 | | | | | |

Table:02 (SEQUENCE OF KNOWLEDGE OF THE ACT)

சட்டம் தொடர்பான அறிவுடையவர்களை (Chart-1, 73.95%) அவர்களிடமுள்ள அறிவின் தரத்திற்கேற்ப வகைப்படுத்திய போது குறித்த சட்டம் தொடர்பான முழுமையான அறிவுடையவர்களாக (Good Knowledge)15 (20%) வர்களும் அடிப்படை அறிவுடையவர்களாக (Basic Knowledge) 38 (51%) மற்றும் சட்டம் தொடர்பான போதுமான அறிவற்றவர்களாக (Poor Knowledge) 21 (29%) காணப்படுகின்றனர். இங்கு போதுமான அறிவற்றவர்கள் எனக்குறிப்பிடப்பட்டவர்கள் குறித்த சட்டம் நடைமுறையில் உள்ளது என்பதை மாத்திரம் அறிந்துள்ளதுடன் சட்டம் தொடர்பாக எந்தவிதமான நடைமுறைசார் மற்றும் கோட்பாட்டு சார் அறிவும்





Chart-2 (Knowledge level of the Students)

அற்றவர்களாவர். மொத்தமாக பார்க்குமிடத்து குறித்த சட்டம் தொடர்பான போதிய அறிவற்றவர்களின் எண்ணிக்கை அதிகமானதாகும். இதனை கீழே உள்ள பை வரைபில் அவதானிக்க முடியும்.

**III. சட்டத்தின் பிரயோகம்**





**Chart-3(Did You Apply This Act?)**

குறித்த சட்டத்தின் பயன்பாடு தொடர்பாக ஆய்வு செய்த போது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 15% ஆனவர்கள் குறித்த சட்டத்தை பிரயோகித்துள்ளதுடன் 85% ஆனவர்கள் சட்டதினை பயன்படுத்தவில்லை என்பது மேலே உள்ள வரைபடம் (Chart-3) காட்டுகின்றது. இதன் மூலமாக கல்விகற்ற சமூகம் சட்டத்தினை பயன்படுத்துவதில் பின்தங்கியவர்களாக உள்ளமையை உணர்ந்து கொள்ள முடியும்.

2. **நோக்கம்-2**

குறித்த சட்டம் பற்றிய குறை அறிவு நிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை அடையாளம் காணல்.

**I. பயன்படுத்தும் ஊடகங்கள்.**





**Chart:04 *( Used Medias)***

மாணவர்கள் குறித்த சட்டம் தொடர்பான அறிவனைப் பெற்றுக் கொள்வதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை பகுப்பாய்வுக்குப்படுத்திய போது அதிகமானவர்கள் (25%) பத்திரிகைகள் (Newspaper) மூலமாக அறிந்துள்ளதுடன் இதற்கு அடுத்த தரத்தில் செல்வாக்குச் செலுத்திய காரணியாக தொலைக்காட்சி (Television) (19%), புலனாம் (Whatsapp) (18%) காணப்படுகின்றன. மிகக் குறைந்த அளவில் செல்வாக்குச் செலுத்திய ஊடகங்களாக வானொலி (Radio) (1%), குடும்ப உரையாடல்கள் (FamilyConversations) (1%) அமைந்துள்ளது.

நல்லாட்சியின் நோக்கங்களுள் மிக முக்கியமான தகவல் அறியும் உரிமையினை நாட்டினுள் பரவச் செய்வதாகும். தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முக்கிய பொறுப்பைக் கொண்டுள்ள நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தமது பணிகளைச் சிறப்பான முறையில் மேற்கொண்டு இச்சட்டத்தைச்

செயற்படுத்துவதற்காக பாரிய பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இப்பணிகளின் கீழ் ஒழுங்கு விதிகளை வர்த்தமானியில் வெளியிடல், நாடெங்கிலும் பொது நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தகவல் உத்தியோகத்தர்களை நியமித்தல், அவர்களுக்குப் பயிற்சி அளித்தல், பொதுமக்களை அறிவுறுத்தல், கையேடுகள், தினகரனின் தகவல் பத்திரிகை போன்ற வற்றை வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகளும் பிரசார வேலைத்திட்டங்களும் இத்திட்டத்தின் கீழ் தொடராக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. என்றாலும் இவ்வாறான செயற்பாடுகளில் கல்விகற்கின்ற மாணவர்களிடம் பத்திரிகை மற்றும் சமூக வலைய தளங்களே செல்வாக்குச் செலுத்தியுள்ளது.

### II. சட்டம் பற்றி மானவர்கள் ஆர்வமும் ஊக்கப்படுத்தலும்





**Chart: 05** ***(Enthusiasm and interesting about the Act)***

மாணவர்கள் சட்டத்தை அறிந்து கொள்வதற்கும் அது தொடர்பான சட்டங்களையும் கற்றுக்கொள்வதற்கு ஊக்கப் படுத்தப்படுகின்றனரா என வினா எழுப்பிய போது இவர்களில் 43% வீதமானவர்கள் "ஆம்" எனவும் 57% வீதமானவர்கள் "இல்லை" எனவும் பதிலளித்துள்ளனர். கலந்துரையாடலில் காரணத்தினை வினவியபோது அவர்களின் பதில்

- குறித்த விடயம் கற்கைத் துறையுடன் தொடர்பற்றது
- இது தொடர்பாக விரிவுரையாளர்கள் தங்களை ஊக்கப்படுத்தவில்லை
- இது அரசியல் விடயங்களுடன் தொடர்புடைய துறைகளுக்கு பொருத்தமான விடயம் எனவும் பதில்கள் அழிக்கப்பட்டது. இருப்பினும் குறித்த விடயம் என்பது நாட்டின் குடிமகன் என்ற வகையில் நாட்டின் அரசியல் விடயங்கள் பற்றி அறிவுடையவர்களாக இருப்பது அவசியமானதாகும்

குறித்த சட்டமானது அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட பத்தொன்பதாவது திருத்தச்சட்டத்தில் ஓர் அடிப்படை உரிமையாக சேர்க்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் உறுப்புரை 14(அ)(1) ஆனது ஒவ்வொரு குடிமகனுக்கும் சட்டத்தால் அளிக்கப்பட்ட வாறான அரச நிறுவனங்களிடமிருந்து தகவலைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை உள்ளது என்கிறது. இவ்வுரிமை தொடர்பாக மாணவர்கள் ஊக்கப்படுத்தப்படாமல் இருப்பதும் மாணவர்கள் சுயமாக கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டாமல் இருப்பதும் இருதரப்பினதும் பலவீனங்களாகும்.





**Chart:06** ***(Factures of Enthused)***

சட்டம் தொடர்பாக ஊக்கப்படுத்தப்பட்டவர்களை(43%) தூண்டிய காரணிகளாக சக நண்பர்கள், விரிவுரையாளர்கள் அடையாளம் காணப்பட்டவையானது ஆய்வுப் பிரதேசத்தில் ஆரோக்கியமான உரையாடல்கள் இடம்பெற்றிருப்பதனையும் மாணவர்களை வழிகாட்டக்கூடிய விரிவுரையாளர்கள் உள்ளனர்

என்பதையும் அடையாளப்படுத்துகின்றது. இருப்பினும் இச்செயற்பாடுகள் பரந்தளவில் விரிவுபடுத்தப்படவில்லை என்பது குறித்த பீடத்தின் பலவீனமாக கண்டறியப்பட்டது.

### III. தெரிவு செய்த பாடங்களின் செல்வாக்கு.





**Chart:07 *(Selected Subjects)***


குறித்த சட்டம் தொடர்பாக மாணவர்களின் அறிவு நிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக அவர்கள் தெரிவு செய்துள்ள மூன்றாம் நிலை முதன்மைப் பாடம் (Third Main Subject) பாடங்களும் செல்வாக்குச் செலுத்துவதனை அவதானிக்க முடிந்தது. அந்த வகையில் அரசியல் விஞ்ஞானத்தினை (Political Science) ஒரு பாடமாக தெரிவு செய்த 25 (34%) மாதரிகளும் சமூகவியலினை (sociology) தெரிவு செய்த18 (24%) மாதரிகளும் குறித்த சட்டம் தொடர்பான அறிவினை பெற்றுள்ளமை குறித்த சட்டத்தினை அறிந்து கொள்வதில் தெரிவுப் பாடங்கள் செல்வாக்குச் செலுத்தியுள்ளமை கண்டறியப்பட்டது.

### IV. குடும்பப்பின்னனி

குறித்த சட்டம் தொடர்பான மாணவர்களின் அறிவு நிலையில் குடும்பப் பின்னணியும் பின்வரும் அடிப்படையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளமையை அறிய முடிந்தது. விகிதாசார அடிப்படையில் 4% வீதமானவர்களே குடும்ப அங்கத்தவர்கள் மூலமாகச் சட்டம் தொடர்பான அறிவினைப் பெற்றுள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

73.95% மாதரிகள் குறித்த சட்டம் தொடர்பான அறிமுக அறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்ற கண்டறிதல் சட்டம் தொடர்பான விழிப்புணர்வினை பெறும் பான்மையானவர்கள் பெற்றுள்ளார்கள் என்கின்ற ஒரு திருப்தி நிலையைக் காட்டுகிறது. எனினும் குறித்த சட்டம் தொடர்பான முழுமையான அறிவுடையவர்களின் தரவு நிலை வீதம் ஒப்பீட்டு அளவில் மிகக்குறைந்த மட்டத்திலே உள்ளமை போதிய திருப்தியைத் தருவதாக இல்லை அத்துடன் குறித்த சட்டத்தை நடைமுறைப் படுத்தியோரின் வீதமானது அறிமுக அறிவு வீதத்தினைப் பார்க்கிலும் குறைவான நிலையினைக் கொண்டுள்ளது. இந்த இடைவெளியானது ஆய்வுப் பிரதேசத்தில் குறித்த சட்டத்தின் பிரயோக வீதம் இன்னும் திருப்திகரமான நிலையினை எட்டவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் 59% ஊடகங்களின் பங்கு காணப்படுகின்றது. அத்துடன் ஊக்கப்படுத்தல், சுய ஆர்வம், குடும்பப் பின்னனி ஆகியன முறையே 34%, 4%, 3% என அமைந்துள்ளன. எனவே குறித்த சட்டம் தொடர்பான அறிவுப் பின்னணிக்கான பிரதான காரணியாக



ஊடகமே செல்வாக்குச் செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இது மாணவர்களின் ஊடகப் பயன்பாட்டினைக் காட்டுகின்றது.

**முடிவுரை (Conclusion)**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக அறிவு நிலையை கண்டறியும் நோக்குடன் செய்யப்பட்ட இந்த ஆய்வானது குறித்த சட்டம் தொடர்பான அறிமுக அறிவினை 73.95% கொண்டிருந்தபோதிலும் அதன் முழுமையான கோட்பாட்டு அறிவு வீதமும் நடைமுறைப் பிரயோக வீதமும் முறையே 15% கொண்டிருப்பதானது இதன் பரவலாக்கத்தின் தேவையை உணர்த்தி நிற்கின்றது அதாவது கல்விசார் பயணத்தில் இருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கே இதன் ஆழமான அறிவுப் பின்னணி இல்லாமல் இருப்பது இச்சட்டத்தின் எதிர்கால இருப்புக்கு கேள்விக்குறியாக அவை அமைகின்றது.

**ஆலோசனைகள் (Recommendation)**

[1]. தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக அறிமுக அறிவே இல்லாத மாணவர்களுக்கு இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

[2]. பல்கலைக்கழக பாடத்திட்டத்தில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் உள்வாங்கப்படல் வேண்டும்.

[3]. பல்கலைக்கழக சமூகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் பயிலரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் விவாதங்கள் ஓர் முறைப்படுத்தப்பட்ட அமைப்பில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

[4]. தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக சமூக வலைய தளங்களின் ஊடாகவே அதிகமான அறிவினைப் பெற்றுள்ள மையினால் இந்த சட்டம் குறித்த முழுமையான அறிவை மாணவர் மயப்படுத்த அரசு சமூகவலைய தளங்களை இன்னும் வினைத் திறனாக பயன்படுத்துவதற்கு ஆவண செய்யப்படல் வேண்டும்.

[5]. ஒப்பீட்டளவில் சட்டம் குறித்த பிரயோகம் குறைந்துள்ள மையினால் அதன் பிரயோக மாதரிகளை குறுந் திரைப்படங்களாக, கானொலிகளாக மற்றும் வீதியோர நாடகங்களாக முன்வைப்பதனூடாக நடைமுறை வீதத்தினை அதிகரிக்க வழிவகுத்தல் வேண்டும்.

[6]. தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான ஆய்வுகளுக்கு மாணவர்கள் பரவலாகத் தூண்டப்படல் வேண்டும்.

**References**


1. Gehan Gunatilleke., (2004)., *Right to Information: A Guide for Advocates.* Sri Lanka press institution.
2. Pinto-jayawardena.K., (2019). *Reflection on Sri Lanka's RTI Act&RTI Regime.* A publication of the RTI commission of Sri Lanka.
3. Gehan Guunatilleke.,(2014). *Right to Information: A Guide for Advocates-1st Edition.* Published by Sri Lanka Press Institute, Colombo-05.
4. Jaspal Singh., (2016).Right to Information Act: A Study About Awareness. *International Research Journal of Commerce Arts and Science. 7*(5), 90-93.
5. கிஷாலி பின்ரோ ஜயவர்தன.,(2019)., *இலங்கையின் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை பற்றிய விளக்க உரைகளும் சட்டத்தைப் பயன்படுத்தும் முறைகளும்.* தகவரறியும் உரிமைக்கான ஆணைக்குழுவின் வெளியீடு.
6. Draft- Rules of the RTI commission in regard to the procedure for holding inquiries. (2017)., *Right to information commission of Sri Lanka rules.* Published by Government of Sri Lanka.

7. Annual Reports, (2017,2018)., *Annual reports: to the right to information commission.,* Published by Parliament of Sri Lanka.
8. The constitution of the Democratic socialist Republic of Sri Lanka., *Fundermental Rights.*

9. SC/FR/NO.76/2012., in the Supreme court of the Democratic socialist Republic of Sri Lanka., *Application under Articale 17 and 126 of the constitution.*